முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
அசல் வழக்கு எண். 185/2020

இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : காந்திமதி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சேகர் | கிராமம் | : திருப்பூர் |
| வயது | : 57 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 24-03-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. தாவா தாக்கல் செய்துள்ள வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் என் சகோதரர்கள் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி என் சகோதரி என்றால் சரிதான். தாவாச் சொத்தில் அண்ணா கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் கடன் வாங்கி தான் வீடு கட்டினார்கள் என்றால் சரிதான். அந்த கடனை என் தாயாரும் 4ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் வாங்கினார்கள் என்றால் சரிதான். கடன் பெற்ற சமயத்தில் என் சகோதரி முகில் கிளாதிங் கம்பெனியில் வேலை பார்த்தார்கள் என்றால் சரிதான்.

2. வீடு கட்ட வாங்கிய கடனை என் தாயாரும், என் சகோதரியும் சேர்ந்து அடைத்தார்களா என்றால் இருவரும் சேர்ந்து தான் கடனை அடைத்தார்கள். என் சகோதரி 4ம் பிரதிவாதி என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். உயில் சாசனத்தின் அசலை நான் எப்போது பார்த்தேன் என்றால் என் அம்மா இறந்த 4 வது நாள் பார்த்தேன். 1ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியம் உயிலின் அசலை என்னிடம் காண்பித்தார்.

3. அதன் பின்னிட்டு உயில் சாசனத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். என் அம்மா இறந்த 4 வது நாள் என்ன செய்தார்கள் என்றால் என் அம்மாவிற்கு காரியம் செய்தார்கள். 4 வது காரியம் செய்ததற்கு குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் அடுத்த நாள் ஆடி மாதம் பிறப்பதால் 4 வது நாளே காரியம் செய்தோம். உயிலின் நகல்

என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அசல் உயில் சாசனத்தை பார்த்தால் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அசல் உயில் ஆவணம் என்றால் சரிதான். உயில் சாசனத்தில் கட்டணம் செலுத்தியவர் என்ற இடத்தில் உள்ள புகைப்படம் யாருடையது என்றால் என் அம்மா உடையது.

4. என் தாயார் இறக்கும் வரை நன்றாக தான் இருந்தார் என்றால் சரிதான். திடீரென என் தாயாருக்கு காய்ச்சல் வந்ததால் ஜுலை 1ம் தேதி திருப்பூர் அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். 10 நாட்கள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தார். பின்னிட்டு வீட்டுக்கு அழைத்து வந்தோம். அதற்கு மறு நாள் என் தாயார் இறந்துவிட்டார். என் தாயார் 4ம் பிரதிவாதிக்கு மற்றவர்களின் தூண்டுதலின் பேரிலோ, கட்டாயத்தின் பேரிலோ உயில் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. மனமார உயில் எழுதி வைத்தார்.

5. தாவாச் சொத்தில் நானும் என் சகோதரர் 2ம் பிரதிவாதியும் பங்கு கோரவில்லை என்றால் என் தாயார் 4ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்ததால் பங்கு கோரவில்லை. என் அப்பாவிற்கும், என் அம்மாவிற்கும் வந்த சொத்துக்கள் என்னவாயிற்று என்றால் என் அம்மா உயிருடன் இருக்கும்போதே அந்த சொத்துக்களை விற்பனை செய்து, அனைவருக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டார்கள். தாவா எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 4ம் பிரதிவாதிக்கு உயில் எழுதிக் கொடுத்த காரணத்தால் பொறாமை பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரிதான்.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.03.24 12:58:23 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.